★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 4} சென்னை: கார்த்திகை 27உ. புதன் (12—12—56) ★ ★ வெளியீடு: கார்த்திகை 28உ. வியாழன் (13—12—56) [இதழ் 150

மாஜி கைதியின் தியாகம்!

மசாஜிரோ ஆஷிதா என்ற 48 வயதான ஜப்பானியர் ஒருவர், அண்மையில் சிறையிலிருந்து திரும்பிவந்ததும், தன் மனைவியும் மக்களும் கஞ்சிக்கு வழியின்றி அவதியுறுவதைக்கண்டு கலங்கிய நிலையில் ஏது செய்வது என்று வருந்தி ஒரு முடிவுக்கு வந்தவராய், 'என் கண்களை மருத்துவமனைக்கு விற்றுப் பணம் பெற்றுக் கொள்' என்று மனைவிக்கு ஒரு கடிதம் எழுதிவைத்துவிட்டு தற்கொலை செய்துகொண்டாராம்.

அவர் மனைவி, மருத்துவமனைக்கு டெலிபோன் செய்ததும், டாக்டர்கள் அந்த தியாக உள்ளம் கொண்டவனின் கண்களைப் பிடுங்கிக்கொண்டு பணம் தந்திருக்கின்றனர்!

'அவதியுறும் மக்களின் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு'

டெல்லிப் பேரரசிற்கு காட்கில் எச்சரிக்கை

'திருட்டுச் சொத்தை' உரியவரிடம் சேர்ப்பீர்

'முக்கியத் தொழில்களை தேயசீமயமாக்குவீர்'

புதுடில்லி, டிச. 12—

" இத்தனை ஆண்டுக் காலமாக மக்கள் அமைதியாக, பொறுமையோடு இருந்துவிட்டனர்; அவதிப்படும் மக்களின் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு.

" நாட்டில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் எத்தனை சீக்கிரம் அகற்றப்பட முடியுமோ அத்தனை சீக்கிரம் அகற்றப்படும் என்று உறுதி மொழி தராத இப்போதைய சமூகத்தை ஒரு சமத்துவ சமூகமாக மாற்ற முன்வராத ஒரு கட்சிக்கு வாக்களிப்பது நியாயமில்லை என்று, நான் மக்களிடம் கூறப்போகிறேன்,"

என்று, முன்னாள் மந்திரி என். வி. காட்கில், டில்லிப் பேரரசிற்கு எச்சரிக்கை தரும் வகையில், அமித இலாப உபரி வரிவிதிப்பு போன்ற வரி விதிப்புகளை வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

" இந்த மசோதாவை எதிர்ப்பதற்கே நியாயமில்லை; மாறாக, இப்போது விதிக்கப்பட்டுள்ள வரி விதிப்பை இன்னும் அதிகரிக்க எல்லா நியாயங்களும் இருக்கின்றன,"

என்றும், காட்கில் இடித்துரைத்திருக்கிறார்.

தேசிய மயமாக்க வேண்டும்

" இப்போதுள்ள எல்லா முக்கியமான தொழில்களும் தேசிய மயமாக்கப்பட வேண்டும். இன்றேல் நீங்கள் பேசுகிற சோஷலிசம், சமவாய்ப்புகள் என்பதெல்லாம் அர்த்தமற்றனவாகிவிடும்.

திருட்டுச் சொத்து

" இந்தியாவில் முதலாளிகளிடத்தில் உள்ள செல்வமெல்லாம் திருட்டுச் சொத்துக்களுக்குச் சமமானதாகும்; எனவே, அந்தச் செல்வத்தை, உரியவர்களுக்குப் பெற்றுத் தர டில்லி முன்வர வேண்டும்.

'ஜட்கா' முறை வேண்டாம்!

" சோஷலிச மாதிரி சமூகமே இலட்சியம் என்று கூறிவிட்ட பிறகு, ஒவ்வொரு நடவடிக்கையும் அந்த இலட்சியத்தை நோக்கிச் செல்வதாக இருக்க வேண்டும். அந்த இலட்சியத்தை அடைய இன்னும் துரிதமான நடவடிக்கைகள் வேண்டும். 'ஜட்கா முறை'யைப் பின்பற்றிக்கொண்டு, காலந்தாழ்த்தக்கூடாது,"

என்றும் என். வி. காட்கில் எச்சரித்திருக்கிறார்.

அவினாசிலிங்கம்

திரு. அவினாசிலிங்கம் பேசுகையில், 'வரி விதித்தால் மட்டும் போதாது; வரி விதிப்பின் மூலம் கிடைக்கும் பொருள் பாழாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்; கிடைக்கிற வரிப் பணத்தை டெல்லி வீணாக்காமல் சிக்கனமாகச் செலவிட வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இவர்கள் இருவரும் காங்கிரஸ் கட்சியினர் என்பது மனதில் கொள்ளத்தக்கது.

'ஏராள உற்பத்தி' என்னவாயிற்று?

உணவுத் தானியங்கள் தொடர்ந்து இறக்குமதியாகுமாம்!

புதுடில்லி, டிச. 11—

1957-ம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்தும் பர்மாவிலிருந்தும் 5-இலட்சம் டன் உணவுத் தானியங்களை இறக்குமதி செய்வதற்கு இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக மக்கள் சபையில் விவசாய அமைச்சர் ஜெயின் அறிவித்துள்ளார்.

இந்த நடைமுறை ஆண்டில் இறக்குமதி செய்வதற்குத் திட்டமிடப்பட்ட 3 இலட்சம் டன்களில் இன்னும் 20 முதல் 25 ஆயிரம் டன் பாக்கி நிற்பதாயும், இந்த அளவும் அடுத்த ஆண்டில் வரவழைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த ஆண்டு முழுமையும் உணவுத் தானியங்கள் எவ்விதத் தடங்கலுமின்றி தொடர்ந்து இறக்குமதியாவதற்கான திட்டமொன்றை சர்க்கார் பரிசீலனை செய்துவருகிறதாம்; பர்மாவுக்குப் பணம் கொடுத்துத்தான் இறக்குமதி செய்யப்படுகிறது.

உணவுப் பொருள்கள் விலையேற்றப் போக்கு

ஓரளவு கட்டுப்படுத்திவிட்டதாக அமைச்சர் கூற்று

'உணவுத் தானியங்கள், துணி ஆகியவைகள்மீது அளவுக்குமீறிக் கடன் கொடுப்பதைக் கட்டுப்படுத்தியதின் மூலம், உணவுப் பொருள்களின் விலையேற்றப் போக்கை சர்க்கார் ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடிந்தது' என்று இராஜ்யசபையில் நிதியமைச்சர் கூறியுள்ளார்.

தஞ்சையில் அரிசி விலை குறைந்துவிட்டதாம்!

தஞ்சாவூர், டிச. 12—

தஞ்சை மாவட்டத்தில் சமீபத்தில் சம்பா நெல் அறுவடையை முன்னிட்டு, அரிசி ஆலை முதலாளிகள், கைவசமுள்ள அரிசியை 'படி அரிசி 12 அணா' என்று தண்டோரா போட்டு விற்றுவிட முயன்று வருகிறார்களாம். இது அரசாங்க விலையைவிட அரையணா குறைவாகும்.

காதர் கதி என்ன?

வியன்னா, டிச. 11—

ஹங்கேரியின் பிரதமரான காதர் என்ன ஆனார்? எங்குள்ளார்? —என்பதே சந்தேகத்துக்குரியதாகி விட்டுள்ளதாம்.

சென்ற வெள்ளிக்கிழமையிலிருந்து அவரை யாரும் எந்தப் பொது இடத்திலும் காணவில்லையென்றும், வானொலியிலும் அவர் நேரடியாகப் பேசவில்லையென்றும் கூறப்படுகிறது.

எனவே, அவர், தற்கொலை செய்துகொண்டிருக்க வேண்டும்; அல்லது, ரஷ்யக் கொலைகாரர்களால் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும் மக்கள் சந்தேகித்து வருவதாக மேற்கத்திய தூதுவர் ஒருவர் கூறியுள்ளாராம்.

டால்மியா நிறுவனங்கள்மீது

ஊழல் புகார்!

விசாரணை நடத்துவதற்கு அதிகாரிகள் நியமனம்

புதுடில்லி, டிச. 12—

சேத் இராமகிருஷ்ண டால்மியா, ஜெப் தயாள டால்மியா, சாந்தி பிரசாத் ஜெயின், சித்தல் பிரசாத் ஜெயின் முதலானோர் 9 பெரிய கம்பெனிகளை நடத்தி வருகிறார்களாம்; மேலும் பல கம்பெனிகள் இந்த 9 கம்பெனிகளுடன் தொடர்புகொண்டு இயங்கி வருகின்றனவாம்.

இந்த நிறுவனங்களின்மீது ஊழல் புகார்கள் வந்துள்ளனவாம்; இதுபற்றி விசாரணை நடத்துவதற்கு பம்பாய் நீதிபதி எஸ். ஆர். மோடி, வருமானவரி அதிகாரி எஸ். சி. சவுத்திரி ஆகியோரை விசேட அதிகாரிகளாக இந்திய சர்க்கார் நியமித்துள்ளனர்.

சென்னை கல்விசீரமைப்புத் திட்டம் பரிசீலனை

சென்னை, டிச 12—

கல்வி சீரமைப்புத் திட்டத்தை பரிசீலனை செய்த சென்னை மாகில சட்டசபைக் குழு, டிச. 17-ந் தேதியன்று நடைபெறவிருக்கும் சட்டசபைக் கூட்டத்தில் தனது சிபாரிசுகளை சமர்ப்பிக்குமென்று தெரியவருகிறது.

நாதசுர இசைப் பெரும் புலவர்

டி. என். இராசரத்தினம் மறைந்தார்

'பறிபோகாத தமிழ்நாட்டுச் செல்வம்' பறிபோய்விட்டது

சென்னை, டிச. 12—

நாதசுரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம் அவர்கள், இன்று சென்னை அடையாறில் உள்ள தமது இல்லத்தில் உயிர் நீத்தார் என்ற சோகச் செய்தியை அறிவிக்க மிக வருந்துகிறோம்.

அவர் கடந்த சில மாதங்களாகவே இரத்தக் கொதிப்பு நோயினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார் என்றாலும், உடல் நலமுற்று வருவதாகவே நமக்குத் தெரிவிக்கப் பட்டுவந்தது. திடீரென அவர் இன்று காலை நம்மைவிட்டுப் பிரிந்தார் என்ற சோகச் செய்தி நமக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கிறது.

அவரது மறைவு, இசை உலகில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். நாதசுர இசையில் அவர், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தனிப்பெரும் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்து வந்தார்.

டில்லிப் பேரரசின் கவனத்தையும் ஈர்த்த அவரது இசைத் திறமை, அவர்களது பாராட்டுதலையும் பெற்றது. இந்த ஆண்டுத் துவக்கத்தில், திரு. இராசரத்தினம் அவர்கள், அண்ணா அவர்கள் முன்னிலையில் தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்கள் இல்லத்தில் இசை விருந்தளித்தார். அதுபோது அண்ணா அவர்கள், 'திரு. இராசரத்தினம் அவர்கள் குழல் ஊதுவதைத் தூரத்திலிருந்து கேட்பவர்கள் அங்கே வீணைக் கச்சேரி நடைபெறுகிறது என்று சிலரும், அங்கே குழல் கச்சேரி நிகழுகிறது எனச் சிலரும், முழவு முழங்குகிறது எனச் சிலரும் கூறுவர்; ஆனால் நெருங்கி வந்து பார்த்தால், திரு. இராஜரத்தினம் அவர்கள் சிறுமாக் குழல் ஒன்றிலிருந்து, வீணையின் இனிமையையும் குழலின் குழைவையும் முழவின் ஒலியையும் கலந்து, நாதசுர இசையாகத் தருகிறார் என்பதைக் காண முடியும்; அத்தனை இனிமையானது அவரது இசை. சென்னைக் கடற்கரையில் ஐந்தாறு இலட்சம் மக்களைக் கூட்டிவைத்து, அவரது இசைப் புலமைக்கு நாம் பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் விழா ஒன்று நடத்த வேண்டும், என்று குறிப்பிட்டுப் பாராட்டினார்கள்.

கடந்த மே திங்களில், திருச்சியில் நடைபெற்ற நமது தி. மு. கழக இரண்டாவது மாகில மாநாட்டில் திரு. இராசரத்தினம் அவர்கள், அரியதோர் இசை விருந்தளித்து நம்மை எல்லாம் மகிழ்வித்தார்.

அவரது மறைவால் வாடும் அவரது குடும்பத்தாருக்கும் எண்ணற்ற உறவினர்களுக்கும் நாம், நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ - ர்.)

* * *

நாளை காலை 9-30 மணிக்கு சவ அடக்கம் நடைபெறும்.

பொதுத் தேர்தல்

தேதிகள் அறிவிப்பு?

புதுடில்லி, டிச. 11—

பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பை இந்திய மக்கள் தலைவரும் மாநில கவர்னர்களும், வரும் சனவரித் திங்கள் 22-ந் தேதியன்று தற்காலிகமாக அறிவிக்கக் கூடுமெனத் தேர்தல் குழு தயாரித்திருக்கும் திட்டத்தின் மூலம் தெரியவருகிறது.

கீழ்ச்சி கீரல்படி அபேட்சகர்கள் தேர்தலுக்கு நிற்க விண்ணப்பித்துக்கொள்ள 1957 பிப்ரவரி 1-ந்தேதி கடைசி நாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

மனுக்களைப் பரிசீலனை செய்து முடிக்க பிப்ரவரி 4-ந் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

போட்டியிலிருந்து வாபஸ்பெற விரும்புவோர் பிப்ரவரி 7-ம் தேதிக்குள் தெரிவித்துவிட வேண்டுமாம்.

மார்ச் திங்கள் இறுதிக்குள் தேர்தல் முடிவடைய வேண்டுமாம்.

வாக்களிப்பு பிப்ரவரி 28-ந்தேதி முதல் ஏப்ரல் 14-ம் தேதிவரை நடைபெறும் என்று தெரியவருகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 12—12—'56 புதன்

பரிகாரம் கிடைக்குமா?

திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பஞ்சில் ஏறத்தாழ ரூ. 4 இலட்சம் மதிப்புடைய 14,000 பேல்கள் வாங்குவாரில்லாது தேங்கிக் கிடக்கிறதாம். இந்த எதிர்பாரா தேக்கத்தினல் மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு மாவட்டங்களிலும் உள்ள பஞ்சு வர்த்தகர்களும் விவசாயிகளும் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர்.

இரண்டு மாவட்ட விவசாயத்திலும் பஞ்சு கணிசமான இடத்தைப் பெற்றிருப்பதாகும். கையிருப்பாகத் தேங்கிக் கிடக்கும் பஞ்சுக்கு விமோசனம் ஏற்படாமல் போனாலும் விமோசனத்தில் தாமதமேற்பட்டாலும், பஞ்சுப் பயிரையே நம்பிக்கிடக்கும் பெருந்தொகையினரான விவசாயிகள் வாழ்வு இருண்டுவிடும். அதுவுமன்றி, இனிமேல் பஞ்சைப் பயிரிடுவதிலும் அவர்களுக்கு ஆர்வமிருக்காது. அதன் விளைவாக வெளிநாட்டிலிருந்து அவ்வகைப் பஞ்சை இறக்குமதி செய்து தீரவேண்டியக் கட்டாயமும் ஏற்படக்கூடும்.

தேங்கிக் கிடக்கும் 14 ஆயிரம் பேல்கள் நீங்கலாக, விவசாயிகளிடமும் ஜின்னிங் ஆலையிலும் பஞ்சு ஏராளமாகத் தேங்கிக் கிடக்கிறதாம்.

விற்பனைக்குத் தயாராக வியாபாரிகளிடம் உள்ள பஞ்சுடன், விவசாயிகளிடமும் ஆலைகளிலும் முடங்கிக் கிடக்கும் பஞ்சையும் கூட்டிப் பார்த்தால், மேலும் பல இலட்சம் ரூபாய் மதிப்புடைய பஞ்சு விற்பனையாகாது இருக்கிறது என்றே முடிவு கட்டலாம்.

தேங்கிக்கிடக்கும் பஞ்சுக்கு, நீண்ட இழை சென்னை உகாண்டா பஞ்சு என்று பெயர். இந்தப் பஞ்சைக் கொண்டு 40 நெ. நூலை நூற்கக் கூடுமாம்.

இந்த உகாண்டா பஞ்சுக்கு ஏற்கனவே நல்ல கிராக்கி இருந்துவந்திருக்கிறது.

சென்ற ஆண்டில் இதே காலத்தில் ஒரு கண்டி பஞ்சு ரூ. 1,150-லிருந்து 1,200 வரை விற்பனை செய்யப்பட்டு இருக்கிறது. அப்பொழுது 40 நெ. நூல் விலையும் 100 பவுண்டு கட்டு ஒன்றுக்கு ரூ. 22—12—0 முதல் ரூ. 24 வரை இருந்திருக்கிறது.

இப்பொழுது ஒரு கண்டி பஞ்சின் விலை ரூ. 970-லிருந்து ரூ. 1,050 வரை இருக்கிறது. ஆனால் நூல் விலையோ சென்ற ஆண்டைவிடக் கூடுதலாக விற்கப்பட்டு வருகிறது. அதாவது 40 நெ. 10 பவுண்டு கட்டு ஒன்று ரூ. 26—14—0 லிருந்து ரூ. 27—10—0 வரை விற்கப்பட்டு வருகிறது.

சென்ற ஆண்டு இதேகாலத்தில் 40 நெ. நூல் விலை குறைவாக இருந்துங்கூட, பஞ்சை அதிக விலை கொடுத்து வாங்க நூற்பு ஆலைகள் முன் வந்தன. ஆனால் இப்பொழுதே நூல் விலை கூடுதலாக இருந்தும் கூட, பஞ்சின் விலை கணிசமாகக் குறைந்திருந்தபோதிலும், அக்குறைவான விலைக்குப் பஞ்சினை வாங்க நூற்பு ஆலைகள் தயங்குகின்றன.

சென்ற ஆண்டைவிட 40 நெ. நூலின் விலை கூடுதலாக இருப்பதிலிருந்தே, அந்த நெம்பர் நூலுக்கு நல்ல தேவை இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ளலாம். அப்படி இருந்தும்கூட, சென்னை உகாண்டா பஞ்சை வாங்க, அதுவும் குறைந்த விலை கொடுத்து வாங்க, நூற்பு ஆலைகள் முன் வரவில்லையானல் அதற்கு எது காரணமாக இருக்கக்கூடும்?

இத்துறையில், இந்தியப் பேரரசு மேற்கொண்டுள்ள பஞ்சு இறக்குமதிக் கொள்கையே காரணம் என்று, திருநெல்வேலி - இராமநாதபுரம் பஞ்சு வர்த்தக சங்கம் அறிவித்திருக்கிறது.

ஒரு அங்குல இழைக்குக் கூடுதலான இழையுள்ள பஞ்சை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யலாம் என்று இந்தியப் பேரரசு அனுமதி தந்திருக்கிறது. அவ்விறக்குமதிக் கொள்கையின் உடனடி பலன்தான், இப்பஞ்சுத் தேக்கம் என்பதில் ஐயமே இல்லை.

இறக்குமதி — ஏற்றுமதிக் கொள்கையை நினைத்தபடி எல்லாம் அடிக்கடி மாற்றிவருவது என்பது இந்தியப் பேரரசின் நிலையற்ற நடைமுறையாகிவிட்டது. அத்திருக்கூத்தின் ஒரு கட்டம்தான், திருநெல்வேலி, இராமநாதபுரம்மாவட்டங்களில் உற்பத்தியாகும் பஞ்சு விற்பனையாகாது தேங்கிக்கிடப்பதாகும்.

உகாண்டா பஞ்சை இப்பகுதியில் உற்பத்தி செய்ய, அரசாங்கம் நடத்திய ஆராய்ச்சி அதிகமாகும். அப்பஞ்சை உற்பத்தி செய்வதில் விவசாயிகளுக்கு ஊக்கமூட்ட மேற்கொண்ட முயற்சிகளும் ஏராளம்.

இவ்வளவிற்குப் பிறகு, விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பஞ்சு விற்பனையாவதற்கு வழியில்லாது சீரழிந்து கிடக்கிறது.

தமிழ் நாட்டு விவசாயிகள் அல்லும் பகலும் இடையருது உழைத்து, நாட்டு ஆலைகளுக்குத் தேவையான பஞ்சை உற்பத்தி செய்து குவிக்கிருர்கள். டெல்லியிலுள்ள பேரரசோ, பேனு முனையினல், இங்குள்ள பருத்தி விவசாயிகளின் வாழ்வை, இமைமூடித் திறப்பதற்குள் சித்திரவதை செய்து வருகிறது.

எதிர்காலத்தில் பருத்தி சாகுபடி செய்வதுபற்றி எண்ணுவதற்கேகூட அஞ்ச வேண்டிய ஒரு நிலை, இப்பொழுது இப்பகுதி விவசாயிகளிடை ஏற்பட்டு இருக்கிறது. இந்த அச்சம் நீங்க நீண்டகாலம் பிடிக்கக்கூடும்.

கைவசமுள்ள பஞ்சினை விற்க முடியாமல் திருநெல்வேலி, இராமநாதபுரம் வியாபாரிகளும் விவசாயிகளும் திண்டாடுகிருர்கள். அதுபற்றிக் கவலையுடன் பரிகாரம் தேட வேண்டிய கடமை கொண்டுள்ள முதலமைச்சரோ, எதிர்காலத் தேர்தல்பற்றி அக்கரை கொண்டு அலைந்து கொண்டு இருக்கிருர். நெருக்கடிக்குப் பரிகாரம் அளிக்கக் கூடிய பேரரசோ, வந்த விருந்து போக்கி வரும் விருந்தை ஆர்வத்துடன் எதிர்நோக்கிக் கொண்டு இருக்கிறது.

இந்நிலையில் தமிழ் நாட்டு விவசாயி — வியாபாரிகளுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைக்கு உடனடியாகப் பரிகாரம் கிடைக்குமா என்பது சந்தேகந்தான்.

14,000 பருத்தி பேல்கள்

தமிழகத்தில் விற்பனையின்றி தேங்கிக் கிடப்பதேன்?

டில்லிப் பேரரசின் இறக்குமதிக் கொள்கையே காரணம்?

எட்டயபுரம், டிச. 8—

திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் சுமார் 14,000 - பஞ்சு பேல்கள் விற்பனையின்றித் தேங்கிக் கிடக்கிறதாம்!

இதன் மதிப்பு ரூ. 84 இலட்சம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு அங்குல இழைக்கு மேல் இழை உள்ள பஞ்சை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யலாம் என்ற அரசாங்கத்தின் இறக்குமதிக் கொள்கையே இதற்குக் காரணமாகவிருக்கும் என்று சிலர் கருதுகின்றனராம்.

மறந்தவர்களை

நினைவுகொள்கிருர் நேரு

புதுடில்லி, டிச. 10—

"நிலத்தில் வேலை செய்யும் விவசாயிகளுக்கும், மற்றும் தொழிலாளர்களுக்கும் திட்டமிடுதலைப் பற்றியோ, திட்டத்தைப் பற்றியோ ஒன்றும் தெரியாது எனும் நினைப்பு ஏற்படக் கூடாது; அவர்களின் ஆதரவைப் பெற்றுத்தான் நாம் செயலாற்றுகிருேம் என்பதை மறந்துவிடக் கூடாது. மக்களின் சக்தி ஒன்று இருக்கிறது என்பதை மனதில் கொண்டு நாம் பணிபுரிய வேண்டும்; இதிலிருந்து தவறினல் நாம் மக்களின் ஆதரவை இழந்து விடுவோம்; இதனல் திட்டங்களும் அதன் இலட்சியங்களும் சீர்குலைந்து விடும்.

"சனநாயக ரீதியில், திட்டத்தின் வெற்றிக்குச் செயலாற்ற வேண்டும்; விவசாயிகள், தொழிலாளர்கள், படித்தோர், பாமரர் ஆகியோரின் முழு ஆதரவைப் பெற நாம் முயலவேண்டும்"

என்று, திட்டக்குழு கூட்டத்தில் பேசுகையில் பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிருர்.

இந்த 'எதிர்ப்பு' பலன் தருமா?

புதுடில்லி, டிச. 10—

"உணவுப் பொருள்கள் மீது வரி விதிக்கவோ, அல்லது எவ்வளவு வரி விதிக்கலாம் என்று கூறும் உரிமையோ மாநில அரசாங்கத்திற்கு இருக்கவேண்டும்.

"துணிக்கு விதிக்கப்படும் விற்பனை வரி மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசப்படுகிறது; இதனல் சென்னை மாநில மக்கள்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர்"

என்று சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தேசிய அபிவிருத்திக் கவுன்சிலில் எடுத்துரைத்த தாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

66 புதிய இரயில்கள் விடப்படுமாம்

புதுடில்லி, டிச. 10—

1957-ம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதிக்குள் 'பிராட்கேஜ்' பிரிவில் 44 புதிய வண்டிகளும், 'மீட்டர் கேஜ்' பிரிவில் 22 புதிய வண்டிகளும் விடப்படுமாம்.

அரசாங்க ஊழியர்கள் ஊதியம் உயரும்?

நிதி அமைச்சர் திட்டத்திற்கு வடநாட்டு மாநிலங்கள் எதிர்ப்பு?

புதுடில்லி, டிச. 11—

மாநில, மத்திய அரசாங்க ஊழியர்கள்—அதிலும் குறைந்த சம்பளம் வாங்கும் 3-வது, 4-வது பிரிவினருக்கு ஊதியத்தை உயர்த்த இந்திய அரசாங்க நிதி அமைச்சர் ஒரு திட்டம் வகுத்துள்ளாராம். அந்தத் திட்டத்தைத் தேசிய அபிவிருத்திக் குழு பரிசிலனை செய்தபின், மாநில அரசுகளின் கருத்தைக் கண்டறிய முயற்சிக்குமாம்.

இந்தத் திட்டப்படி குறைந்த பட்ச சம்பளம் ரூ 100-ஆக உயர்த்தப்படுமாம்.

இந்தத் திட்டத்தைத் தென்னிந்திய மாநில அரசுகள் ஆதரிக்கின்றனவாம். வட இந்திய மாநில அரசுகள் அதிக அக்கரை காட்டுவதாகத் தெரியவில்லையாம்.

சர்க்கார் ஊழியர்கள்மீது

'கருணை' பிறக்கிறது?

சென்னை, டிச. 12—

மத்திய அரசாங்க ஊழியர்களுக்குத் தரப்படும் 'கிராக்கிப்படி'யைப் போல மாநில அரசாங்க ஊழியர்களுக்கும் உடனடியாக உயர்த்தினல் 7 அல்லது 8 கோடி ரூபாய் தேவைப்படுமென்றும், எனவே இதை படிப்படியாகத்தான் செய்ய முடியும் என்றும் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் நிருபர்களிடம் கூறியுள்ளார்.

மாதம் ரூ 100-க்குக் குறைவாகச் சம்பளம் வாங்கும் அரசாங்க ஊழியர்களுக்குக் 'கிராக்கிப்படி'யை உயர்த்தி இடைக்கால நிவாரணம் அளிக்கும் விஷயமாக மாநில சர்க்கார்களுடன் மத்திய அரசாங்கம் கலந்தாலோசிக்குமாம். இதற்காக ஒரு கமிட்டியும் ஏற்படுத்தப்படுமாம்.

இழந்த உரிமையைத் திரும்பப் பெற வாய்ப்பு?

புதுடில்லி, டிச. 10—

மக்கள் பிரதிநிதித்துவ மசோதாவுக்கு திருத்தமொன்றுகொண்டு வரப்பட்டு, அது மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது

இந்தத் திருத்தத்தின் மூலம் முக்கியமாக, தேர்தலில் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் அல்லது ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபட்டவர்கள் யோக்கியதாம்சத்தை இழந்துவிடும் பிரிவு நீக்கப்படுகிறது.

பாராளுமன்றத்திற்கும், சட்டசபைகளுக்கும் பிரதிநிதித்துவம் பெறத் தேர்தலில் நிற்பதற்கும் வாக்களிப்பதற்கும் தகுதி கிடையாது என்ற முக்கிய பிரிவை நீக்குவதே இந்தத் திருத்தத்தின் நோக்கமாகும்.

நிறுத்தல், முகத்தல் அளவையில்

தசாம்ச முறையாம்!

புதுடில்லி, டிச. 10—

நிறுத்தல், முகத்தல் அளவைகளில் தசாம்ச முறை 1958 - ஏப்ரல் 1-ந் தேதி முதல் அமுலுக்கு வருமாம்.

புத்திசாலித்தனமாகத் திட்டமிடப்படவில்லையாம்!

கிழக்கு ஐரோப்பியக் குழப்பம் பற்றி பண்டித நேரு

புதுடில்லி, டிச. 10—

புத்திசாலித்தனமாகத் திட்டமிடுக் கொள்கையை அமுல் நடத்தாததால் கிழக்கு ஐரோப்பாவில் தொல்லைகளும் தொந்தரவுகளும் ஏற்பட்டுள்ளதாகவும், சரியாகத் திட்டமிடப்பட்டுக் காரியமாற்றப்படவில்லை என்பதை நடைபெற்ற நிகழ்ச்சிகள் நிரூபித்துவிட்டன என்றும் பண்டித நேரு, கிழக்கு ஐரோப்பா குழப்பம் பற்றி திட்டக் குழுவின் கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

தொழிற் சங்கங்கள் கட்டாய அங்கீகாரச் சட்டம்

அமுல் நடத்தாததுபற்றி அமைச்சர் தரும் விளக்கம்

'தொழிற்சங்க இயக்கமே பலவீனமாகிவிடும்' என்கிருர்

புதுடில்லி, டிச. 10—

1947-ம் ஆண்டின் இந்தியத் தொழிற்சங்கத் திருத்தச் சட்டத்தை அரசாங்கம் அமுல் நடத்தாததால் நாட்டில் தொழிற்சங்க இயக்கம் பலவீனமாகிவிடவில்லை என்றும், மாருக பலமடைந்திருப்பதாகவும் தொழிலாளர் அமைச்சர் கந்துபாய் தேசாய் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

'சில சந்தர்ப்பங்களில் தொழிற்சங்கங்களைக் கட்டாயமாக அங்கீகாரம் செய்யவேண்டும்' என்று மேற்கூறிய சட்டம் கூறுகிறது; மற்றும், தொழிலாளர் பிரச்சினையில், 'நியாயமற்ற முறை'களை நிர்வாகிகள் பின்பற்றினல், அதை இந்தச் சட்டம் தடுக்கிறது.

'இந்தச் சட்டத்தை சர்க்கார் ஏன் அமுல் செய்யவில்லை' என்ற கேள்விக்கு, அமைச்சர் மேற்கண்டவாறு பதில் கூறிவிட்டு மேலும் சொன்னர்:—

"தொழிற்சங்கங்களை அங்கீகாரம் செய்யுமாறு கட்டாயப்படுத்துவதால் நாட்டில் தொழிற்சங்க இயக்கமே பலவீனமாகிவிடும் என்று இந்திய சர்க்கார் கருதுகின்றனர்; அரசியல் காரணங்களுக்காகச் சில சங்கங்கள் அங்கீகாரம் செய்யப்படவில்லை என்ற புகார்கள் ஆதாரமற்றவையாகும்; ஏராளமான உறுப்பினர்கள் உள்ள பெரும்பான்மையான சங்கங்கள் —அவற்றின் அரசியல் கொள்கை எவ்வாறு இருப்பினும் அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கின்றன"

கிராம அதிகாரிகளுக்கு ஊதிய உயர்வு?

அமைச்சரின் நிபந்தனை?

புதுக்கோட்டை, டிச. 10—

கிராம அதிகாரிகள், பரம்பரை உரிமைகளுடன் தொடர்ந்து குறைந்த நேர சர்க்கார் ஊழியர்களாகவே இருக்க விரும்புகின்றனரா, அல்லது மாற்றங்கள் முதலிய பொறுப்புகளுடன் முழுநேர ஊழியர்களாக இருக்க விரும்புகின்றனரா என்பதுபற்றி முடிவு மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

முழுநேர ஊழியர்களானல் கணிசமான ஊதிய உயர்வு தரப்படுமென்றும் ஆனல், இப்போதிருப்பதைப் போலவே பணியாற்றுவதென்றல் ஓரளவுக்குத்தான் ஊதியங்கள் உயர்த்தப்படுமென்றும் அமைச்சர் மாணிக்கவேலர் கூறியுள்ளார்.

அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும் வரையில், பிரயாணப்படி போன்ற பிரச்சினைகள் சம்பந்தமாக இன்னும் சில தினங்களில் உத்தரவு பிறப்பிக்கப்படுமாம்.

நாட்டின் செல்வம் அந்நியருக்குக் குத்தகையா?

அமெரிக்க நிறுவனத்திடமா . டி.டி.டி. உற்பத்தித் தொழிற்சாலை?

புதுடில்லி, டிச. 9—

கேரள மாநிலத்தில் ஆல்வாய் பகுதியில் நாட்டின் இரண்டாவது டி. டி. டி. தொழிற்சாலையை அமைக்கவும், உற்பத்தி சாதனங்களை அளிக்கவும், உற்பத்தியைத் துவக்கவும் மொத்தம் 7,37,100 டாலருக்கு அமெரிக்கக் கம்பெனியொன்றுக்கு காண்டிராக்ட் வழங்கப்பட்டிருக்கிறதாம்.

இந்தத் தொழிற்சாலையை அமைக்க ரூ 80 இலட்சம் செலவாகுமாம். இங்கு ஆண்டுக்கு 1,400 டன் டி. டி. டி. தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாம். 1958 மத்தியில் உற்பத்தி துவங்கும் என கருதப்படுகிறது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள சம்பவங்கள்

'ரஷ்ய மாடலை காப்பியடித்ததின் விளைவேயாகும்'

'கம்யூனிஸ்டு கட்சிகளின் சுதந்திரத் தனித்தன்மை காப்பாற்றப்பட வேண்டும்'

இத்தாலி கம்யூனிஸ்டுத் தலைவர் கருத்து

ரோம், டிச 10—

"ரஷ்ய 'மாடலை' அப்படியே காப்பியடித்ததின் விளைவு தான், இன்று கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்குக் காரணமாகும்"

என்று, இத்தாலி நாட்டுக் கம்யூனிஸ்டுத் தலைவர் டோக் லியாட்டி இத்தாலி கம்யூனிஸ்டுக் கட்சி காங்கிரசில் கூறியிருக்கிறார்.

"ஒரு நாட்டில்—ரஷ்யாவில், சோஷலிசம் நிறுவுவது என்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைக்கு வெற்றிகரமான முடிவைத் தேடித் தந்த சில கொள்கைகளை சர்வ தேசத்திற்கும் பொருந்தும் என்று கூறமுடியாது—கூறக்கூடாது. அவற்றை அப்படியே காப்பியடிப்பதும் கூடாது"

என்றும் டோக் லியாட்டி கூறியிருக்கிறார்.

"உலகெங்கிலுமுள்ள கம்யூனிச இயக்கத்தில் ஒற்றுமை தேவைதான்; ஆனல் அந்த ஒற்றுமை, ஒவ்வொரு கட்சியினுடையவும் தனிச் சுதந்திரத்தன்மையினல் ஊக்குவிக்கப்படும் பரஸ்பர சிந்தனை நோக்கு, வளர்க்கிற சுய அனுபவங்களின் வேறுபாடுகள், மூலத் தன்மை இவற்றின் அடிப்படையில் எழுவதாயிருக்க வேண்டும்.

"எல்லாம் ஓரிடத்தில் குவியும் ஒரு இயக்கத்தில், எல்லா வகையான உருவங்களையும் தோற்றங்களையும் எதிர்க்கிறோம்"

என்றும், டோக்லியாட்டி கூறியிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில், விவசாயம் உடனடியாகக் கூட்டுப் பண்ணை முறையில் மேற்கொள்ளப்படுவதையும், கனரகத் தொழில்கள் எழுப்பப்படுவதையும் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

இரயில் விபத்தைத் தடுக்க புதிய சாதனம்!

திருச்சி, டிச. 01—

வருங்காலத்தில், இரயில் எஞ்சின்கள் பாதையிலிருந்து விலகி விபத்துக்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'பாப் ஜாக்கெட்' என்ற சாதனத்தை எஞ்சின்களில் பொருத்துமாறு தென்னிந்திய இரயில்வே ஊழியர்கள், மத்திய இரயில்வே அமைச்சரைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்தச் சாதனம், தொழிலாளர்கள் சங்க உறுப்பினர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, பொறியியல் நிபுணர்களால் ஒப்புதல் பெறப்பட்டதாகும்.

ஹங்கேரி: 'மக்கள் எழுச்சி'யை ஒப்புகிறார் சௌ-என்-லாய்

ஆனல் 'அழிவு சக்திகளை மேற்கு நாடுகள் தூண்டின' என்கிறார்

சோஷலிச நாடுகளின் ஐக்கியம் காப்பாற்றப்பட வேண்டுமாம்

"ஹங்கேரிக்கு எதிராக அழிவு வேலைகளைச் செய்யும் நோக்கத்துடன் மேற்கத்திய நாடுகளில் சில, ஹங்கேரியில் தோன்றிய மக்களின் எழுச்சியைத் தங்களுக்குச் சாதகமானதாகப் பயன்படுத்திக்கொள்ள முயற்சித்ததின் விளைவுதான் ஹங்கேரிச் சம்பவங்களாகும்.

"சில நாள், ஹங்கேரியில் இந்த அழிவுச் சக்திகள் தலைதூக்கி நின்று, அட்டகாசங்கள் புரிந்தன.

"தங்களின் சோஷலிச சாதனைகளைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானல் ஹங்கேரி மக்கள் இந்தச் சூழ்நிலை நீடிப்பதை அனுமதிக்க முடியாது.

"சோஷலிஸ்டு நாடுகளின் ஐக்கியத்தையும் நலன்களையும் பாதுகாப்பதற்காக, சோஷலிஸ்டு நாடுகளின் ஐக்கியத்திற்கு வேட்டு வைக்கும் எதையும் அனுமதிக்க முடியாது.

"சோஷலிச ஆட்சி முறையைத் தூக்கி எறிவதற்காக வெளிநாட்டவர், ஹங்கேரிக்குள் தூண்டிவிடும் அழிவுச் சக்திகளை நாங்கள் எதிர்க்கிறோம்.

'சில நாடுகள், தங்கள் நாடுகளுக்குள் அழிவு வேலைகளைச் செய்யும் தீய சக்திகளைப் பிறர் தூண்டிவிடுவதாகக் கூறிவிட்டு, தாங்களே அந்த வேலையில் ஈடுபடுகின்றன, சோஷலிஸ்டு நாடுகளுக்கு எதிராக!"

என்று சீனப் பிரதமர் சௌ-என்-லாய், கல்கத்தாவில் பத்திரிகையாளரிடம் பேசுகையில் கூறியிருக்கிறார்.

நேருவுடன் கருத்து வேறுபாடு

ஹங்கேரி விவகாரத்தில், நேருவின் கருத்தில் ஒரு பகுதியை மட்டுமே தான் ஏற்பதாகவும், மறு பகுதியைத் தான் ஏற்பதற்கில்லை என்றும், இந்தக் கருத்து வேறுபாடு நேசத்தின் அடிப்படையில் எழுந்ததே என்றும் சௌ-என்-லாய் கூறியிருக்கிறார்.

வ.உ.சி. இளைஞர் மன்ற ஆண்டுவிழா

பொதுச் செயலாளரிடம் தேர்தல் நிதிக்கு ரூ. 75 தரப்பட்டது

சென்னை, டிச. 11—

சென்னை 26-வது வட்டம் பெரியமெட்டு வ. உ. சி. இளைஞர் மன்றத்தின் 11-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம், கடந்த 7-ந் தேதியன்று மாலை 6 மணியளவில், பெரியமெட்டு எவரெஸ்டு ஓட்டல் அருகிலுள்ள வீராசாமி பிள்ளை தெருவில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தோழர் மாசிலாமணி முன்மொழிய, தோழர் இராமச்சந்திரன் வழிமொழிய தோழர் இரா. கோதண்டராமன் தலைமை வகித்தார்.

தலைவர் முன்னுரைக்குப்பின் தோழியர் சத்தியவாணிமுத்து திரு. வி. க. படத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்தினர்.

அடுத்து தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் டாக்டர் அம்பேத்கார் மறைவு குறித்தும், அவர் நாட்டுக்கு — குறிப்பாகப் பின்தள்ளப்பட்ட மக்கள் நல்வாழ்வுக்குச் செய்த சேவைகளைக் குறித்தும் சிறிது நேரம் உரை நிகழ்த்தினர்.

பின்னர், மன்றச் செயலாளர் தோழர் மாசிலாமணி, மன்ற ஆண்டறிக்கை வாசித்தார்.

இறுதியாகத் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், டாக்டர் அம்பேத்காரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், கழகக் கொள்கைகளை விவரித்தும் அரியதோர் உரை நிகழ்த்தினர்.

26-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், பொதுச்செயலாளருக்குக் கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

கூட்டத்தில், தி. மு. கழகத் தேர்தல் நிதியாக மன்றச் சார்பில் தோழர் சு. பாலன் அவர்களால் ரூ. 75 கொடுக்கப்பட்டது.

பின்னர், தோழர் மு. கன்னியப்பன் நன்றி கூறிக் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டிருந்தனர். (ச. - தி.)

கிராம எண்ணெய் உற்பத்தித் தொழில்

அபிவிருத்திக்குப் பல பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தத் திட்டம்

புதுடில்லி, டிச. 11—

நடப்பு நிதி ஆண்டில் கிராம எண்ணெய் உற்பத்தித் தொழில் அபிவிருத்தித் திட்டமொன்றை இந்திய அரசாங்கம் அங்கீகரித்துள்ளதாம்.

இந்தத் திட்டத்தின்கீழ் 75 மாதிரி நிலையங்களும், 2 பயிற்சி நிலையங்களும் ஏற்படுத்தப்படுமாம்.

மாநிலங்களில் 20 கூட்டுறவு நிலையங்கள் ஏற்படுத்தப்படுமாம்; ஏற்கனவே, ரூ. 28,75,000 இதற்காக வழங்கப்பட்டுள்ளதாம்.

இந்த ஆண்டு மேலும் இரண்டு நிலையங்கள் அமைக்கப்பட்டு 280 தச்சர்களுக்கும் 280 சோதனையாளர்களுக்கும், நவீன எண்ணெய் செக்குகளை உபயோகிக்க 4,000 பேருக்குப் பயிற்சியும் அளிக்கப்படுமாம். மேலும் 25 பட்டறைகளை அமைத்து ஆண்டுதோறும் 500 எண்ணெய் செக்குகள் தயாரிக்கப்படுமாம்.

நாகர் எழுச்சி ஓயவில்லை!

ஜோர்கத், டிச. 9—

தனி நாடு கோரும் நாகர்களில் பலர் தீவிரவாதிகளாகி, டில்லி சர்க்காரின் முழு பல இராணுவ நடவடிக்கைகளையும் மீறி கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரியவருகிறது.

இப்போது மீண்டும் அவர்கள் ஜோர்கத் தென்பகுதியில், 'தாக்குதலைத் துவங்கி'யிருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

சென்னை சர்க்கார் பஸ் போக்குவரத்து

எண்ணிக்கை பற்றிய தகவல்

சென்னை, டிச. 11—

"தற்போது சென்னை அரசாங்க பஸ் போக்குவரத்தின்கீழ் ஓடும் மொத்த பஸ்களின் எண்ணிக்கை 445; அலுவலக நேரத்தில் 387 பஸ்கள் ஓடுகின்றன; மற்ற நேரங்களில், போக்கு-வரத்து நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு 12 அவசர கால பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன" என்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

சம்பளப் பட்டுவாடா சட்டத்திற்குத் திருத்தம்

இந்திய சர்க்கார் உத்தேசம்

புதுடில்லி, டிச. 10—

சம்பளப் பட்டுவாடா சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவர இந்திய அரசாங்கம் யோசித்து வருகிறது.

கட்டுப்பாடு நடவடிக்கையாகச் சம்பள உயர்வுகளை நிறுத்தி வைக்கவும், மற்றும் தகுந்த தண்டனைகளை வழங்கவும் அதிகாரமளிப்பது தான் இந்த திருத்தத்தின் நோக்கமாக இருக்கும்.

வானொலி மூலம் தேர்தல் பிரச்சாரம்செய்ய அனுமதி

புதுடில்லி, டிச. 11—

'வானொலி மூலம் தேர்தல் பிரச்சாரம் செய்வதற்கு அரசியல் கட்சித் தலைவர்களை அனுமதிப்பதா இல்லையா என்பது பற்றி இன்னும் இரண்டு மூன்று நாட்களில் முடிவு செய்யப்படும்' என்று அமைச்சர் கேஸ்கர், மக்கள் சபையில் கூறியுள்ளார்.

'ஹங்கேரி எழுச்சி: பாசிஸ்டுகளின் எதிர்ப் புரட்சியல்ல'

'தொழிலாளரின் புரட்சியேயாகும்'

'காதர் சர்க்கார் சந்தேகத்திற்குரியதே'

யூகோ குடியரசின் துணைத் தலைவர் கருத்து

பெல்கிரேட், டிச. 10—

"ஹங்கேரி எழுச்சி பாசிஸ்டுகள் நடத்திய எதிர்ப்புரட்சியல்ல; மாறாக, தொழிலாளர்களின் புரட்சிதான்!

"அதிகார சமபல நோக்குடன், சர்வதேச அரசியல் காரணங்களை முன்னிட்டு, ரஷ்ய இராணுவத் தலையீடு நடைபெற்றது,"

என்று, எட்வர்டு கார்தெல்ஜ் என்ற யூகோ குடியரசின் துணைத் தலைவர் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

"காதர் சர்க்காரைப் பொறுத்தவரை, துவக்கத்தில் அந்த சர்க்கார், முன்னாள் பிரதமர் நாகியை ஆதரிக்கும் கம்யூனிஸ்டுகளுடனும் இதர தொழிலாளர்களுடனும் நெருங்கிய கூட்டுறவு கொள்வதுபோலவே தெரிந்தது; ஆனல், யூகோவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தையும் மீறி, நாகியையும் அவரது ஆதரவாளர்களையும் கைது செய்து நாடு கடத்தியது, 'ஹங்கேரியில் சோஷலிச ஜனநாயகத்தை காதர் சர்க்கார் காப்பாற்றுமா?' என்ற சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது.

கிளர்ச்சிக்குக் காரணம் என்ன?

"முன்னாள் கம்யூனிஸ்டு தலைவர்களான மத்யாஸ்ரகோசி, மற்றும் எர்னோகெரோ போன்றவர்களின் தவறுகள் மட்டுமல்ல ஹங்கேரிப் புரட்சிக்குக் காரணம்; ஆனல், ஸ்டாலினிச—சர்வாதிகார ஆட்சி முறையும்தான் காரணமாகும்.

"இந்த பழைய முறையே தொடர்ந்து பின்பற்றப்படுமானல், ரஷ்யாவின் இராணுவத் தலையீடு, ஹங்கேரியில் சோஷலிசத்தைக் காப்பாற்ற முடியாது."

தலைமை நிலையச் செய்தி:

தி. மு. கழக

மத்திய செயற்குழுக் கூட்டம்

29—12—56

சனியன்றும்

பொதுக்குழுக் கூட்டம்

30—12—56

ஞாயிறன்றும்

சேலத்தில்

நடைபெறும்

'அறிவகம்' சென்னை
5—12—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

கீழ்த்தரப் போலீஸ் சிப்பந்திகள் நிலைமை

குடியிருப்புப் பிரச்சினை பற்றி யோசிக்கப்பட்டு வருகிறதாம்

சென்னை, டிச. 10—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்த்தரப் போலீஸ் சிப்பந்திகளுக்கு 70 சதவிகிதம் பேருக்கு குடியிருப்பு வசதியளிக்க யோசிக்கப்பட்டு வருகிறதாம்.

விசேட ஆயுதப் படையினருக்கு மட்டும் குடியிருப்பு வசதிக்கு ஆவடியில் ரூ 9,25,000 பெறுமானமுள்ள இடமொன்றை அரசாங்கம் வாங்கியுள்ளதாம்.

சென்னை—புதுப்பேட்டை மைதானத்தில் போலீசார் பொழுதுபோக்கு வசதிக்காக ஒரு 'ஸ்டேடியம்' அமைக்கப்படுமாம்.

பணத்தைக் கையாடியதாக டால்மியா மீது வழக்கு

ஜன. 4-ந் தேதி மறு விசாரணை

புதுடில்லி, டிச. 10—

பாரத் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் ரூ. 2,85,84,704—5—0-த்தைக் கையாடியதாக இராம கிருஷ்ண டால்மியா மீதும் மற்றும் 8 பேர் மீதும் தொடரப்பட்டுள்ள வழக்கு டில்லி மாவட்ட மாஜிஸ்திரேட் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எல்லா எதிரிகளுக்கும் தஸ்தாவேஜுகளின் பிரதிகளை அளிக்குமாறு உத்தரவிடப்பட்டது. மறு விசாரணை ஜனவரி 4-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் அம்பேத்கார் மறைவுக்கு அனுதாபப் பொதுக்கூட்டம்

பல்லாயிரம் மக்களிடை பொதுச்செயலாளர் இரங்கலுரை

என். வி. நடராசன், வ. வீராசாமி எம்.பி., முதலியோரும் கலந்துகொண்டனர்

சென்னை, டிச. 12—

டாக்டர் அம்பேத்கார் அவர்களது மறைவு குறித்து, அனுதாபம் தெரிவிக்கும்பொருட்டு, நேற்று மாலை வண்ணை, கல்லறை மைதானத்தில், தி. மு. க. தலைமை நிலையச் சார்பில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து தங்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

தோழர் டி. கே. பொன்னுவேலு முன்மொழிய தோழர் கோ. இளவரசு வழிமொழிய கூட்டத்திற்கு தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் தலைமை தாங்கினர்.

முன்னுரையாற்றுகையில் தோழர் என். வி. நடராசன் அவர்கள், டாக்டர் அம்பேத்கார் அவர்களது அறிவாற்றலையும் மக்கட் பணியையும் எடுத்துரைத்துவிட்டு, அவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தான் கூடியிருந்த அனைவரும் மூன்று நிமிட நேரம் அமைதியாயிருந்தனர்.

தீர்மானம்

மனிதகுல மேன்மைக்கும்—குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்கும், வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட, தலைசிறந்த பகுத்தறிவுவாதியும் அரசியல் மூதறிஞருமான டாக்டர் அம்பேத்கார் அவர்களின் மறைவு குறித்து, தி. மு. க. தலைமை நிலையச் சார்பில் நடைபெறும் இப்பொதுக் கூட்டம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் குடும்பத்தாருக்கும் உற்றாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறது.

அடுத்து, தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் சிறிது நேரம் பேசியதும், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரும், மக்கள் சபை உறுப்பினருமான வ. வீராசாமி அவர்கள், அம்பேத்காரின் சேவைகளைக் குறித்தும், அவரது அறிவாற்றலைக் குறித்தும் எடுத்துரைத்து, அவரது மறைவு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பெருநஷ்டம் என்று குறிப்பிட்டுப் பேசினர்.

பின்னர் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள், டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்தெந்தத் துறைகளில் எல்லாம் பாடுபட்டார் என்பதை எடுத்துரைத்தார்.

அடுத்து தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள், டாக்டர் அம்பேத்காரின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கும் போதகூட ஆச்சாரியார் தன் குலம்புத்தனமான புத்தியைக் (தொடர்ச்சி 1-ம் கலம் பார்க்க)

(3-ம் கலத்தின் தொடர்ச்சி)

காட்டியிருப்பதை எடுத்துரைத்துக் கண்டித்தார்.

இறுதியாக, தி. மு. க. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், டாக்டர் அம்பேத்காரின் அறிவாற்றல் குறித்தும் சேவைகள் குறித்தும், அவர் மறைவால் ஏற்பட்டுவிட்ட நஷ்டம் குறித்தும் உருக்கமாக எடுத்துரைத்து, அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தனியாக இயலாவிட்டாலும் பலராகச் சேர்ந்தேனும் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தனது உரையின் இறுதியில் 'உறுதி, உறுதி, உறுதி—ஒன்றே சமூகம் என்றே எண்ணார்க்கு இறுதி, இறுதி, இறுதி' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதையை முழக்கியது, அனைவரின் உள்ளத்தையும் தொட்டது.

தலைவர் முடிவுரைக்குப்பின், நன்றி கூறலப்பட்டு, கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. - தி)

கழகக் கூட்டம்

★

கோப்பனூர்புதூர் :
வள்ளுவர் திடலில்
14—12—56 மாலை 5-மணிக்கு
தி. மு கழகக் கிளை துவக்க விழா
பேசுவோர் :
கோவை-செழியன்
கே. பொன்னுசாமி

நீத்தார் நினைவு நாள்

14-12-56 காலை 10 மணிக்கு, குறிஞ்சிப்பாடி மீனாட்சிப் பேட்டை தோழர் கு. பெ. பாலகுருசாமி இல்லத்தில், அவரது மகளும் தோழர் இரெ. இளம்வழுதி அவர்களின் துணைவியாருமான தோழியர் விசாலாட்சி மறைவுற்றமை குறித்து, அண்ணு அவர்கள் தலைமையில் நீத்தார் நினைவு நாள் நடைபெறும்.

ஈ. வெ. கி. சம்பத்

சுற்றுப்பயணம்

டிச. 13 : காங்கேயம்
14 : கொளாநல்லி
15 : மேட்டுப்பாளையம்
16 : பகல் 2-மணி : குன்னூர்
மாலை 6-மணி : கோவை
19 : தேனி
20 : தொம்பக்குளம்
23 : மதுரை

****

தி.மு. க. தேர்தல் நிதி திரட்டும் வாரம்

கிளைக் கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே!

இம்மாதம் 10-ந் தேதி முதல் 16-ந் தேதி வரையுள்ள ஒரு வார காலம் தேர்தல் நிதி திரட்டும் வாரம் என்பதை அறிவீர்!

ஊர்தோறும், வீதிதோறும், வீடுகள்தோறும் சென்று நிதிதிரட்டித் தலைமை நிலையத்திற்கு உடன் அனுப்பித்தர வேண்டுகிறோம்.

கழகம் வெற்றி முரசு கொட்ட கடமையாற்றுவீர்!

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டங்கள்

பொதுச்செயலாளர்
இரா. நெடுஞ்செழியன்
புரட்சி நடிகர்
எம். ஜி. இராமச்சந்திரன்
ஆகியோர் சுற்றுப்பயணம்

டிசம்பர் 15 :	காலை	....	திருச்சி
	மாலை	....	மதுரை
16 :	காலை	....	கோவில்பட்டி
	மாலை	....	தூத்துக்குடி
17 :	காலை	....	துறையூர்
	மாலை	....	நாமக்கல்

குறிப்பு :—மேற்கண்ட ஊர்கள் தவிர வேறு எந்த ஊருக்கும் இப்பொழுது வருவதற்கு இயலாததலால், வேறு யாரும் இப்பொழுது அழைப்பு விடவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தி. மு. கழகத் தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டங்கள்

★

திருச்சி :
தேவர் மன்றத்தில்
15—12—56 காலை 9 மணிக்கு
தலைவர் : எம். எஸ். மணி
நாகூர் அனீபா
இன்னிசை வழங்குவார்
இரா. நெடுஞ்செழியன்
'இலக்கிய இன்பம்'
எம். ஜி. இராமச்சந்திரன்
'கலையும் வாழ்வும்'
என்ற தலைப்புகளில் பேசுவர்.

★

மதுரை :
தமுக்கம் மைதானம்
திறந்தவெளி அரங்கில்
15—12—56 இரவு 8 மணிக்கு
நாகூர் அனீபா
இன்னிசை வழங்குவார்
இரா. நெடுஞ்செழியன்
'வள்ளுவர் காட்டும் அரசியல் நெறி'
எம். ஜி. இராமச்சந்திரன்
'நாடும் நடிகர்களும்'
என்ற தலைப்புகளில் பேசுவர்.

வேலூர் :
நேஷனல் தியேட்டரில்
16-12-56 காலை 10-மணிக்கு
தலைவர் : எம். பி. சாரதி எம்.சி.
அண்ணு
என். வி. நடராசன்
ஆகியோர் பேசுவர்

★

கோவில்பட்டி :
பாப்புலர் டாக்கீசில்
16-12-56 காலை 10-மணிக்கு
இரா. நெடுஞ்செழியன்
எம். ஜி. இராமச்சந்திரன்
பேசுவர்.

★

தூத்துக்குடி :
டெல்பின் தியேட்டரில்
16—12—56 மாலை 4-மணிக்கு
இரா. நெடுஞ்செழியன்
எம். ஜி. இராமச்சந்திரன்
பேசுவர்.

★

துறையூர் :
பாரதி தியேட்டரில்
17—12—56 காலை 9-மணிக்கு
தலைவர் : டி. பி. அழகமுத்து
இரா. நெடுஞ்செழியன்
'சங்க கால அரசியல்'
எம். ஜி. இராமச்சந்திரன்
'கலையும் கழகமும்'
என்ற தலைப்புகளில் பேசுவர்.

நாமக்கல் :
ராஜா டாக்கீசில்
17—12—56 மாலை 3-மணிக்கு
இரா. நெடுஞ்செழியன்
எம். ஜி. இராமச்சந்திரன்
பேசுவர்.

திருமணம்

13—12—56 காலை 7½ மணிக்கு சென்னை - தங்கசாலை, எண். 330 இல்லத்தில், தோழர் மயிலை-சிவ. முத்து தலைமையில், 8-வது வட்ட தி. மு. கழகத் தோழர் மு. நடராசன்—தோழியர் இராமலிங்கம் அம்மை திருமணம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், சி. ஆர். பாலசுந்தரம், தோழியர் சத்தியவாணி முத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

வட ஆற்காடு மாவட்டத்தில் தேர்தல் நிதி நாடகங்கள்

அண்ணு அவர்களும் — கழகத் தோழர்களும் நடிக்கும்

சந்திரோதயம்

★

திருவண்ணாமலையில்:
14-12-56 வெள்ளி இரவு 10-மணிக்கு

குடியேற்றத்தில்: [ஒரே நாளில் இரண்டு நாடகங்கள்]
15-12-56 சனி மாலை 6-மணிக்கு, இரவு 10-மணிக்கு

திருப்பத்தூரில்:
16-12-56 ஞாயிறு இரவு 10 மணிக்கு

★

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! கழகம் வெற்றி முரசு கொட்ட கடமையாற்றத் திரண்டு வாரீர்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

சென்னை 47-வது வட்ட தி. மு. க. தோழர்கட்கு :

13—12—56 காலை 8 மணிக்கு, சென்னை சைதை (47-வது வட்டம்) தி மு. கழகத் தோழர்கள் உண்டியலுடன் அவ்வட்டத்தில் தேர்தல் நிதி திரட்ட வருவார்கள். வட்டப் பொதுமக்கள் அனைவரும் இயன்ற அளவு பொருளுதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அன்று காலை 8 மணிக்கு முன்னதாகவே, கழக உறுப்பினர்கள் அனைவரும் கடைத் தெரு எண். 95 இல்லத்தில் கூடுமாறும் கோரப்பட்டுள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.